00103

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
இடைநிலை, மூன்றாம்நிலை கல்வித் துறை
கல்விப்பீடம்
முதுகல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப்பரீட்சை- **2018/2019**

**ESP2318/ STP9618 –** கல்வி முகாமைத்துவம்

காலம் : 03 மணித்தியாலங்கள்

---

நேரம் : மு.ப 09.30 – நண்பகல் 12.30 திகதி : 24.03.2019

---

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு விடையளிக்குக

01. (i) முகாமைத்துவம் எனும் பதத்தினை வரைவிலக்கணம் செய்க? (08 புள்ளிகள்)

 (ii) முகாமையாளர் ஒருவர் தமது நிறுவனங்களில் நிறைவேற்றவேண்டிய வேறுபட்ட வகிபாகங்கள் யாவை? (12 புள்ளிகள்)

 (iii) தற்கால முகாமையாளர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ள பிரதான சவால்கள் பற்றிக் கலந்துரையாடுக? (13 புள்ளிகள்)

02. (i) ஏதாவதொரு கல்வி நிறுவனத்துடன் தொடர்புற்றதாக அடிப்படை முகாமைத்துவ தொழிற்பாடுகள் நான்கினை (04) விளக்குக? (08 புள்ளிகள்)

 (ii) முகாமைத்துவத்தின் நடத்தைசார் அணுகுமுறை மற்றும் விஞ்ஞான அணுகுமுறை என்பவற்றை இனங்காண்க? (12 புள்ளிகள்)

 (iii) தற்போதைய நிறுவனச் சூழலுக்கு நடத்தைசார் அணுகுமுறை விஞ்ஞான அணுகுமுறையினைவிட மிகவும் பொருத்தமானது என நீங்கள் கருதுகிறீர்களா? கலந்துரையாடுக. (13 புள்ளிகள்)

03. (i) மாற்ற முகாமைத்துவம் என்றால் என்ன? (08 புள்ளிகள்)

 (ii) எந்தவொரு நிறுவனத்திலும் சில ஊழியர்கள் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கு எதிராகவே செயற்படுகின்றனர். விளக்குக? (12 புள்ளிகள்)

 (iii) உங்களுடைய நிறுவனத்தில் மாற்றம் ஒன்றினை எவ்வாறு வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவீர்கள் என்பதை நீங்கள் கற்றுக்கொண்டுள்ள பொருத்தமான “மாற்ற மாதிரி”(Change Model) ஒன்றின் துணையுடன் உங்களது விடையினை விளக்குக?

 (13 புள்ளிகள்)

04. (i) தலைமைத்துவம் எனும் பதத்தினை வரைவிலக்கணம் செய்க? (08 புள்ளிகள்)

(ii) "சகல தலைவர்களும் முகாமையாளர்களும் அல்லர் சகல முகாமையாளர்களும் தலைவர்களும் அல்லர்" கருத்துரைக்குக? (12 புள்ளிகள்)

(iii) உங்களுடைய நிறுவனத்தின் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்தவதற்கு எவ்வகையான தலைமைத்துவ பாங்கினை நீங்கள் சிபாரிசு செய்வீர்கள் என உதாரணங்களுடன் விளக்குக? (13 புள்ளிகள்)

05. (i) தொடர்பாடல் என்பதனால் நீங்கள் கருதுவது யாது? (08 புள்ளிகள்)

(ii) எந்தவொரு நிறுவனத்திலும் பயன்படுத்தத்கூடிய தொடர்பாடல் செயன்முறையை விளக்குக? (12 புள்ளிகள்)

(iii) பெரும்பாலான நிறுவனங்களில் தொடர்பாடல் பெரும்பாலும் மேலிருந்து கீழ்நோக்கியதாகவே காணப்படுகின்றது" இக்கூற்று பற்றிக் கலந்துரையாடுக? (13 புள்ளிகள்)

06. (i) இலங்கையின் கல்வி முறையில் காணப்படும் கல்விப் பிரச்சினைகள் ஐந்தினை (05) விளக்குக? (08 புள்ளிகள்)

(ii) இலங்கையின் கல்வி முறையுடன் தொடர்புபட்ட முகாமைத்துவ, சுற்றாடல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகள் யாவை? (12 புள்ளிகள்)

(iii) மேற்படி பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை விமர்சன ரீதியான பகுப்பாய்வு செய்க? (13 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*